## 17. தலைப்பு 17 – பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்

---

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

---

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்க கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 மே 30 ஆந் திகதி பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் செயலாளரிற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்குகிடைக்கப் பெற்றுள்ள பதவியணியினர் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்க கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் நிர்வாகப் பணிகள் மீதான பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கில் பின்வரும் 17.4 இலிருந்து 17.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

## 17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 17.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுகளினதும் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதான செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர்கள் என்போருக்கு விலாசமிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச பொது நிதிப்பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் ஆகக் குறைந்தது தொடர்ந்து வரும் 03 வருடங்களுக்கான கூட்டிணைந்த திட்டம் அலுவலகத்தினால் ஆண்டின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத் திட்டமானது 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 17.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### தீர்க்கப்படாத பொறுப்புகள்

அலுவலகத்தினால் 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 47,473 ஆக இருந்ததுடன் அவை ஒரு வருடத்திற்குக் குறைந்த காலப்பகுதிக்குரியதாக இருந்தது.

## 17.6 இணக்கமின்மைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை

2006 இன் 12 ஆம் இலக்க முத்திரை வரி (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் ரூபா 25,000 இனை விஞ்சுகின்ற கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 1,144,016 தொகையான கொடுப்பனவுகளுக்காக முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**17.7 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 3 | 3 | - |
| (ஆ) | மூன்றாம் நிலை | 3 | 3 | - |
| (இ) | இரண்டாம் நிலை | 11 | 9 | 2 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 14 | 12 | 2 |
| | மொத்தம் | 31 | 27 | 4 |

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மீளாய்வாண்டின் இறுதியளவில் 04 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.